1973 நவம்பர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்ட கேள்விக்கு மேலும் விளக்கங்களைப் பெற வேண்டியிருப்பதால் போதிய விளக்கம் பெறும் வகையில் 'அரை மணி நேரம் விவாதம் வேண்டும்' என்று கேட்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களுக்குப் போதிய சமயம் இல்லையென்று சொன்னால் அப்போது அரை மணி நேரம் விவாதம் வைத்துக் கொள்ளலாம். மற்ற நேரங்களில் முக்கியமான கேள்விகளுக்கு அதிகமான துணைக் கேள்விகள் கேட்க நேரத்தை ஒதுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இது பற்றி பிறகு முடிவு செய்து கொள்ளலாம்.

அடுத்து கேள்வி எண் 182.

2. வினக்கள்—விடைகள்.—தொடர்ச்சி.

(1) வெள்ளிக் குறியிட்ட வினக்கள்—தொடர்ச்சி.

ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசுத் திட்டம்

* 182 **வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த பஞ்சாயத்து யூனியனைத் தேர்ந்தெடுத்து பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) சிறந்த ஊராட்சி ஒன்றியத்தை தேர்ந்தெடுப்பதில் பல துறைகளில் அவ்வொன்றியத்தின் சாதனைகள் கருத்தில் கொள்ளப்படுகிறது. அவைகளில் முக்கியமானவை வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சிறுபாசனம், கல்வி, சமூகக் கல்வி, மகளிர் மற்றும் குழந்தைகள் திட்டம், கூட்டுறவு, கிராமத் தொழில் கிராம வேலைத்திட்டம் முதலியன. இதற்கான மதிப்பெண் மற்றும் தெறிநிலை (Indicator) அரசு நிர்ணயித்துள்ளது. அந்தப் பெருக்க அடக்குக் குறியின் அடிப்படையில் அதிக மதிப்பெண் பெற்ற ஊராட்சி ஒன்றியத்தை அந்த மாவட்டத்தின் அவ் வருடத்தின் சிறந்த ஊராட்சியாக ஊரக வளர்ச்சி இயக்நர் தேர்ந்தெடுக்கிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்குப் பரிசுகள் தற்போது வழங்கப்படுகின்றன. இதைத் தவிர அதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுத்தால் தமிழகம் முழுவதும் போட்டி மனப்பான்மை ஏற்பட்டு மேலும் பல நல்ல ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக வாய்ப்பு இருக்கும். இதை அரசாங்கம் பின்பற்றுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : ஊராட்சி ஒன்றியங்களில் சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசு வழங்கப்படுகிற நிலையில் சில ஊராட்சி ஒன்றியங்கள் பெரிதாகவும் எண்ணிக்கையில் அதிகமான ஊராட்சிகளைக் கொண்டதாகவும், சில குறைந்த ஊராட்சிகளைக் கொண்டதாகவும், மற்றும் பண வசதி போன்றவற்றிலும் வேறு வேறு மாதிரியான நிலைமையிலிருக்கும்போது பரிசு வழங்கம் போது இவற்றை யெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு செயல்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு மதிப்பெண்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

வேளாண்மை 25 ; கால்நடை மற்றும் மீன்வளம் 10 ; சிறு பாசனம் 5 ; கல்வி 5 ; சமுகக் கல்வி 10 ; மகளிர் மற்றும் குழந்தைகள் திட்டம் 10 ; கூட்டுறவு 5 ; கிராமத் தொழில் 5 ; கிராம வேலைத் திட்டம் 15 ; மற்றவை 10—ஆக மொத்தம் 100.

இந்த மார்க்குகள் விகிதாசாரப்படி ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

Subsidy for electricity charges to Panchayats

*183 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have examined the proposals to offer subsidy to the Panchayat Unions in the State for their power consumption; and

(*b*) if so, the details thereof ?